OS .No. 51 /2002

Dated : 17.11.2021

Time: 11.16 a.m To 11.23 a.m.

P.W. - 1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசராணை செய்யப்பட்டார்.

குறுக்குவிசாரணை

எனது மாமனார் கணபதி கவுண்டரின் தகப்பனார் பெயர் ராமசாமி கவுண்டர் என்றால் சரிதான். எனது கணவரின் பூர்வீகம் சிங்காளந்தபுரம் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டருக்கும், அவரது பெருமாயிக்கும் சாமிகவுண்டர், கணபதி மற்றும் பழனிவேல் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். ராமசாமிக்கு தாயம்மாள் என்ற ஒரு மகளும் உண்டு என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. என் அப்பா குடும்பத்திற்கும் என் மாமனார் குடும்பத்திற்கும் எங்கள் திருமணத்திற்கு பிறகுதான் உறவுஎன்றால் சரிதான். அதற்குமுன்பு எந்த உறவும் இல்லை என்றால் சரிதான். என் அப்பா இருந்தது மணிவிழுந்தான் காலனி. என் கணவர் ஊர் வேப்பநத்தம். மணிவிழுந்தான் காலனிக்கும் வேப்பநத்தத்திற்கும் இடையில் சுமார் 8 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு என் கணவரின் குடும்ப நிகழ்வுகள் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது)

Sd/- Selvi.R.Dhanam,
Subordinate Judge,
Attur.